நாடுமுழுவதும் வடபகுதி வெங்காயம், மிளகாய்!

பக்கங்கள் 6 விலை சதம் 30 ★ ★

ஈழநாடு

The EELANADU

மலர்: 18 தை 14 ஸபர் 6 இதழ்: 847

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-1-77

மக்கள் வங்கி திட்டம்

கொழும்பு, புதன்

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை நாடு முழுவதும் பரவலான முறையில் விநியோகம் செய்வதற்கான புதிய திட்டம் ஒன்றை மக்கள்வங்கி வகுத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இத்திட்டம் விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது.

வடபகுதியில் தேங்காய் விநியோகத்தை கூட்டுறவு அடிப்படையில் விநியோகம் செய்யவும் இத்திட்டத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் திறக்கப்பட்ட மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இதற்கான பிரிவு ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. (உ)

வங்கி விகிதம் அதிகரிப்பு

கொழும்பு, புதன்

மத்திய வங்கி, வங்கி விகிதத்தை இன்று முதல் இரண்டு வீதத்தால் அதிகரித்துள்ளது.

1970-ம் ஆண்டு முதல் ஆறரை விகிதமாக இருந்த வங்கி விகிதம் இப்போது எட்டரை விகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. [உ]

காவலில் இருந்த தமிழ் இளைஞர் ஆறுபேர் விடுதலை

மற்றும் சிலர் விரைவில் வெளிவரலாம்

கொழும்பு, புதன்

சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் ஆறுபேரை இன்று நண்பகல் அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

சிறையிலுள்ள மற்றும் இளைஞர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்களென எதிர்பார்க்கப்படுவதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

கவிஞர் காசி ஆனந்தனின் சகோதரர்களான சுதர்சனன், சிவஜெயம் ஆகிய இருவரும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த [illegible] அல்போன்ஸ் மேரி, செயராஜா (செயன்), வேராசா ஆகியோரும், திருக்கோணமலையைச் சேர்ந்த ஸ்ரீசந்திராசா ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர் (உ)

'ரயில் சேவை சிறப்புற ஒத்துழைப்பு வேண்டும்'

கொழும்பு, புதன்

'ரயில்சேவைகள் சிறப்புற நடைபெறுவதற்கு ரயில்வே பகுதியில் உள்ள சகல ஊழியர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்' என்று ரயில்வே பகுதிப் புதிய பொதுமுகாமையாளராகப் பதவியேற்றுள்ள திரு. எஸ். அமரசூரிய கூறினார்.

இன்றுகாலை அவர் ரயில்வே பகுதித் தலைமைக்காரியாலயத்தில் பதவியேற்றுக்கொண்டார்.

திரு. அமரசூரியா பேசுகையில் கூறியதாவது: 'பொது மக்களுக்குத் திருப்தியேற்படும் வகையில் ரயில்வே சேவைகள் நடைபெறுவதற்கு சகலதரப்பு ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும். சிவில் பொறியியலாளராக 25 வருட அனுபவம் பெற்றுள்ளமையால் ஊழியர்களின் பிரச்னைகளை நான் நன்கு அறிவேன். ஊழியர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்'.

(6-ம் பக்கம் பார்க்க)

தேடப்பட்ட ஆசிரியர் கைது!

திருமலை, புதன்

1971 கிளர்ச்சியின் போது பொலிஸ் நிலையங்களைத் தாக்கிய குழுவினருக்குத் தலைமை தாங்கியவராகக் கருதப்பட்டு இதுவரை பொலிசாரால் தேடப்பட்டு வந்த ஆசிரியரான லொக்குபண்டார எக்கநாயக்கா என்பவர் கல்லோயாவிலுள்ள காடொன்றில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்நபரைக் கைதுசெய்ய உதவுபவருக்கு வழங்கப்படுமென அறிவித்திருந்த 45 ஆயிரம் ரூபாவில் இந்நபர்பற்றிய தகவல் தந்தவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் மிகுதி 15 ஆயிரம் ரூபா இந்நபரைக் கைது செய்த பொலிசாருக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

பல்கலைக்கழக மாணவர் பிரச்னைபற்றி ஆராயக்குழு

கொழும்பு, புதன்

பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்னைபற்றி ஆராய்வதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஜீ. பி. ஏ. சில்வா தலைமையிலான 5 பேர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை கல்வியமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் நியமித்துள்ளார்.

மக்கள்வங்கி புள்ளிவிபர ஆராய்ச்சியாளர் டாக்டர் பி. டி. எஸ். ஈ. குணதிலக, பேராதனை வளாகத் தலைவர் டாக்டர் ஜயசிங்க, கொழும்பு வளாக வரலாற்று விரிவுரையாளர் டாக்டர் வி. பஸ்தியாம்பிள்ளை.

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் பிச்சைக்காரர் அகற்றப்படுகின்றனர்

விசேஷ ஆணையாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும், மற்றும் இடங்களிலும், பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுப்பதுடன், நகரத்தை அசுத்தமாக்கி வரும் பிச்சைக்காரர்களை நகரிலிருந்து அகற்றுவதற்கு, யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. சு. ஏ. யோசப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ் மாநகரசபை தொழில் பகுதி பொறியியலாளர், ஓவசியர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்ட கோஷ்டியினர், நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் பிச்சைக்காரர்களை நகரிலிருந்து அகற்றும் திட்டத்தை அமுல்நடத்த ஆரம்பித்தனர்.

அவசியம் ஏற்பட்டால் பொலிசாரின் உதவியுடன் இவர்களை மாநகரசபை எல்லைக்கு வெளியே அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

பிச்சைக்காரர்களால், பஸ் பிரயாணிகளுக்கு தொல்லை ஏற்படுவதுடன், சில சம்பவங்களில் ஜேப்படி திருட்டுகள் நடை

[6-ம் பக்கம் பார்க்க]

உ

திருமண அழைப்பு

இறையருளால் நிகழும் நள வருஷம் தை மாதம் 17 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (30-1-77) காலை 8-30 மணியில் வரும் சுபமுகூர்த்தத்தில் எமது இளைய மகன் **திருவளர் செல்வன் ஞானகரன்** (ஹரன் ஜுவலர்ஸ்) அவர்களுக்கும், தொல்புரம் திரு. சோ. ஞானப்பிரகாசம் (பிரகாச அச்சகம், பிரகாச ஆபரண மாளிகை) அவர்களின் இளைய மகள் **திருநிறை செல்வி லிங்கேஸ்வரி** அவர்களுக்கும் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் நிகழவுள்ளது. உறவினர்களையும், நண்பர்களையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(தனித்தனி அழைப்புக்கள் செய்ய இயலாமைக்கு மன்னிக்கவும்)

உமாபதி கந்தசாமி
திருமதி அன்னலட்சுமி கந்தசாமி

உமாபதி
கந்தர்மடம்.
25-1-77.

5334

"சிறை இளைஞர்பற்றி கவலையில்லை

தேர்தல் நீடிப்பு பற்றியே கூட்டணிக்கு அக்கறை"

ராஜன் செல்வநாயகம் கூறுகிறார்

வவுணதீவு, புதன்

'சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குமாறாக மாவட்ட அரசியல் அதிகாரி பதவிகளையும் உதவிமந்திரிப்பதவிகளையும் பெற்றுக் கொள்வதற்காக ஆட்சிமன்றத் டணி அரசாங்கத்துடன் தேர்தலை நீடிப்பதுபற்றி பேச்சுவார்த்தைநடாத்தி தமிழர் விடுதலைக் கூட்

(5-ம் பக்கம் பார்க்க)

INSITTUTE OF ADMINSITRATIVE
ACCOUNTANCY PART I, II

தகைமை:- ஜீ. சி. ஈ. (சாதாரண) நான்கு பாடங்கள், மாலை வகுப்பு ஆரம்பம்:- 31-1-1977.

யாழ் சட்ட நிலையம்

81, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

5337

நாகர்கோவில் சங்கக்கடை சம்பவம்:

'இரண்டு பேரை கைகளில் பிடித்து இழுத்துச் சென்றனர்'

நெல்லியடி, புதன்

சங்கக்கடை மனேச்சர் சதானந்தனும், இராசேந்திரமும் இரண்டு நபர்களை கைகளில் பிடித்து இழுத்துக்கொண்டு என்னைக் கடந்து சென்றனர்.

இவ்வாறு நாகர்கோவில் சங்கக்கடை முன்பாகக் கிடந்த இனந்தெரியாத சடலம் மீதான மரணவிசாரணையில் சாட்சியமளித்த நாகர்கோவிலைச் சேர்ந்த செல்லையா குணதிலகபிள்ளை கூறினார்.

பருத்தித்துறை நீதவான் திரு. அ. கங்காதரன் முன்னிலையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற இவ்விசாரணையில் குணதிலகபிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மலேரியாக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டு சற்று குணமடைந்த நிலையில் வீட்டில் படுத்திருந்தேன். அந்நேரம் சங்கக்கடைப் பக்கமிருந்து சத்தம் ஒன்று கேட்கவே வீட்டிலிருந்து வெளியே வந்த நான் எனது வீட்டுக்கும் சங்கக்கடைக்கும் இடைப்பட்ட வீதியில் நின்றுகொண்டிருந்தேன்.

அப்போது கள்ளர், கள்ளர் என்று சத்தம் போட்டுக்கொண்டு பலர் வயலுக்கு ஊடாக தெற்குப் பக்கமாக ஓடிக்கொண்டிருந்தனர். வேறு ஆட்களும் வடக்குப்பக்கத்திலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் சங்கக்கடை மனேச்சர் சதானந்தனும், இராசேந்திரமும் வேறு இருவரும் தூரத்தில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னும் சற்றுத் தூரத்தில் வேறொருவர் சைக்கிள் ஒன்றை உருட்டிக்கொண்டு வந்தார். அந்த நபரை இன்னாரென என்னால் அடையாளம் காண முடியவில்லை. வீதியால் வந்துகொண்டிருந்தவர்கள் என்னைக் கடந்து சங்கக்கடைப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். என்னைக் கடந்து போய்க்கொண்டிருக்கும்போது சதானந்தனும், இராசேந்திரமும் இரண்டு நபர்களின் கைகளையும் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றனர். அவர்களின் பின்னால் சைக்கிளை உருட்டி வந்த நபரும் சைக்கிளுடன் போய்க்கொண்டிருந்தார்.

இவர்கள் சங்கக்கடையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது மேற்கொண்டு அவ்விடத்தில் நான் நிற்காது நேரே என் வீட்டுக்குப் போய்விட்டேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் சங்கக்கடைப் பக்கம் போகவில்லை. வீட்டுக்குச் சென்ற நான் படுக்கைக்குச் சென்றுவிட்டேன். அன்றைய தினம் காலை எட்டு மணியளவில் எனது மைத்துனரான உபதபாலதிபர் சந்திரசேகரம் என்னிடம் வந்து களவெடுக்க வந்த கள்ளரைப் பிடித்து கட்டி வைத்திருக்கிறார்கள் எனக் கூறி கிராம சேவையாளரை அழைத்து வரும்படி கூறியதையடுத்து நான் கிராமசேவகரை அழைத்துவந்தேன். பிடித்து வந்த இரண்டு நபர்களில் ஒருவர் இறந்ததாகவோ, மற்றவர் காயமடைந்ததாகவோ என்னிடம் கூறவில்லை என்றார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

எஸ். ஆர். ஞானசுந்தரம்

நா. போஜன்

கிராம அபிவிருத்திப் பணிகளிலும், சமூகசேவையிலும் மிகுந்த ஆர்வத்துடன் முன்னின்றுழைத்துவரும் மாவிட்டபுரம் கிராமஅபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம், செயலாளர், திரு. நா. போஜன் ஆகியோர் அவர்களின் சேவையைப் பாராட்டி பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. விஜயபாலா மேற்படி சங்கத்தின் கைத்தொழில் மண்டபத் திறப்புவிழாவில் கலந்துகொண்டபோது உபதலைவருக்கு 'சமூகத்தொண்டன்' என்னும் பட்டத்தையும் செயலாளருக்கு "சமூக ஜோதி", என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தார்.

உபசாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மாவட்ட விவசாய அலுவலராகப் பணியாற்றி இடமாற்றலாகியுள்ள திரு. வி. சத்தியானந்தனுக்கு பிரியாவிடையும், அவரின் இடத்துக்கு புதிதாக வந்துள்ள திரு. நா. சிவமூர்த்திலிங்கத்துக்கு வரவேற்புபசாரமும் நடைபெற்றது.

கரம்பன் மகளிர் இளம் விவசாயிகள் கழக ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தீவுப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க சிவக்கொழுந்துவும் கழகத் தலைவர் திரு. எம். குஞ்சம்பிள்ளையும் பாராட்டுரை நிகழ்த்தினர். (ஶ்ரீ)

கிளர்ச்சிக்காரர் கைதானார்!

திருகோணமலை, புதன்

1971-ம் ஆண்டில் நடைபெற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டவரெனக் கூறப்படும் லொக்குபண்டா ஏக்கநாயக்க என்ற ஆசிரியர் ஹபரணையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

1971-ல் பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டது தொடர்பாகவும் பல வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்பாகவும் இவர் இதுவரை காலமும் தேடப்பட்டுவந்தார்.

இவரைக் கைது செய்வதற்குரிய தகவல் தருவோருக்கு 30,000 ரூபா சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர் இதுவரை காலமும், பொலநறுவை, அனுராதபுரம் காட்டுப்பகுதிகளில் தலைமறைவாக இருந்துவந்தாராம். (ஶ்ரீ)

இணக்கசபை—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கி. கந்தையா, செ. சோமலிங்கம், ந. யோகராசா, த. இராசரத்தினம், வை. மகாதேவன், நா. ஆறுமுகம், இ. முருகேசு, கே. இன்பத்துரை, க. அரசசிங்கம், ச. [illegible], இ. வேலராசா, ஆ. நடராசா, மு. வடிவேலு, ஆ. நாகேஸ்வரன், க. செல்வத்துரை, செ. ஜோ. மரியநாயகம், திருமதி நவமணிதேவி அருணாசலம், மி. அ. யேசுதாசன், செ. பூராசா, வீ. நீக்கிலாஸ் பிள்ளை, மா. குணசேகரம், தலைவர் கி. இராசதுரை. (மா)

......

உற்பத்தி அதிகரிப்பு

பரந்தன், புதன்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்திகள் 35 சத விகிதத்தில் இருந்து 65 சத விகிதமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஶ்ரீ)

இனம் தெரியாத சடலம்

வியாங்கொடை, புதன்

வியாங்கொடை புகையிரத நிலையத்திற்கு சற்றுத்தொலைவில் உள்ள வயல்வெளி ஒன்றில் இனந்தெரியாத ஆண் சடலம் ஒன்று கிடந்தது.

சுமார் 45க்கும் 50க்கும் இடைப்பட்ட வயதுடைய இவர் கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இவர் வியாங்கொடைப் பகுதியைச் சேர்ந்தவர் அல்ல எனத்தெரிவிக்கப்பட்டது.

வியாங்கொடைப் பொலிசார் இம் மர்மக்கொலை பற்றி விசாரணைபுரிகின்றனர். (ஶ்ரீ)

வரிவிளம்பரம்

பயிற்சி

வெளிநாடுகளில் வேலைபெற ஏற்ற பயிற்சிகள் மேல்நாட்டு கல்வி பயிற்சி பெற்றவர்களால் நடாத்தப்படும். வெல்டிங் (Electric and Gas) இலெக்ட்ரிக் வயறிங், ரேடியோ (Transistor), தொழில் புதியோருக்கு விசேஷ மாலை நேர வகுப்புகளும் உண்டு. National Institute of Engineering Technology, [illegible] மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

5298

ஆசிரியருக்குக் கடிதம்

யாழ். பஸ் நிலையத்தில்!

ஐயா,

யாழ். மத்திய பஸ்நிலையத்தில் பிரயாணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நான் மணிக்கணக்காகப் பஸ்ஸுக்குக் காத்து நின்ற பிரயாணிகளில் ஒருவன்.

கியூ வரிசையில் நாம் காத்து நிற்கையில் நாம் செல்லவேண்டிய பஸ், கியூ வரிசைக்கு முன்பாக நிறுத்தப்படாமலே பஸ்நிலையத்தின் வேறொரு பாகத்தில் நிறுத்தப்பட்டுப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டது. இவ்விதம் பிரயாணிகளை ஏறஅனுமதித்தது குறித்து அப்பஸ்ஸின் சாரதிக்கும், கண்டக்டருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகச் சக-பிரயாணிகள் பேசிக்கொண்டார்கள்.

இதேவேளை அந்த பஸ்ஸில் பயணச் சீட்டின்றி அமர்ந்திருந்த பிரயாணிகள் கூட்டாக இறங்கவேண்டும் அல்லது அவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று மிரட்டும் அதிகாரத் தொனியில் பஸ்நிலைய ஒலிபெருக்கி கூறியது.

அக்குரலின் கம்பீரத்தை நாம் பாராட்டும் அதேவேளை எதற்காக இப்படிப் பிரயாணிகளை மிரட்டும் தொனியில் இவர்கள் கூறவேண்டுமென்று கேட்கத் தோன்றுகிறது. இத்தவறு நேர்ந்ததற்கு முதற் காரணம் பஸ் ஊழியர்தானே. பின் பிரயாணிகளைக் கோபித்துக்கொண்டால் எப்படி?

இந்த பஸ்நிலையத்தில் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதில் பஸ் சாரதிகளும், கண்டக்டர்களும் கடைப்பிடித்துவரும் முரண்பாடான முறைகளினால் தான் இந்த அவஸ்தை விளைகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் உடன் கவனம் செலுத்தி, கியூவில் வந்து காக்கும் பிரயாணிகளின் இடர் துடைப்பார்களா?

எஸ். கந்தையா

நெல்லியடி.

லட்சார்ச்சனை

மாவிட்டபுரம், புதன்

சரித்திரம் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வருடாந்த லட்சார்ச்சனை நேற்று ஆரம்பமானது. அடுத்தமாதம் 3ம் திகதிவரை தொடர்ந்து அர்ச்சனை நடைபெறும்.

புதிய ஆதீனகர்த்தர் பிரமஸ்ரீ து. சண்முகநாதக்குருக்கள் தலைமையில் அர்ச்சனை நடைபெற்றுவருகிறது. [அ]

கஞ்சா—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

திரு எஸ்.கே திரவியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சட்டத்தரணி திரு க. கந்தசாமி எதிரிசார்பில் ஆஜராகி "[illegible] மருந்தாக கஞ்சாவைப் பாவிக்க எதிரி வைத்திருந்தார்" என்று கூறினர். நீதிபதி 25ரூபா அபராதம் விதித்தார். (ஶ்ரீ)

மரண அறிவித்தல்

சித்தவைத்தியர் ஜே. இராயப்பு

நெடுந்தீவைச் சேர்ந்த சித்தவைத்தியர் திரு. ஜே. இராயப்பு அவர்கள் 25-1-77 செவ்வாய்க்கிழமை மாலை செட்டிகுளத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார். இவர் திரு. ஞானச்சந்திரன், காலஞ்சென்ற திரு. ஞானசூரியர், திரு. நட்சேஸ்திரம், திருமதி ஞானப்பூ, அருட்திரு ஜோசவ் அடிகள், திரு. தோமஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாவார். நல்லடக்கம் 27-1-77 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

செட்டிகுளம்,
26-1-77.

5333

மரண அறிவித்தல்

வை. சதாசிவம்

திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சதாசிவம் காலமாகிவிட்டார். இவர் சாரதாம்பாளின் அன்புக் கணவரும், டாக்டர் எஸ். முத்துலிங்கம் (பேராசிரியர் கொழும்பு பல்கலைக்கழகம்), எஸ். தேவதாஸ் (தேயிலை கட்டுப்பாட்டு திணைக்களம், கொழும்பு), திருமதி சோமசேகரன், திருமதி இராசலிங்கம், திருமதி ஆனந்தன் ஆகியோரின் தந்தையுமாவார். பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அன்னாரது இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் தருபவர்:
ச. சிவானந்தன்.

5331

கோட்டு விற்பனை விளம்பரம்

யாழ்ப்பாணம் நீதிமன்றம்

வழக்கு. இல: 14513

1. அப்புசாமி பொடியப்பு
பாசையூர், யாழ்ப்பாணம்

வாதி

எதிராக

1. ஜோஸ்வா வெற்றி வர்ணகுலசிங்கம் பெண்
2. டொமினிக்கா, பூமணியும் இருவரும்
பாசையூர்.
தற்போது 4-ம் குறுக்குத்தெரு, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

பிரதிவாதி

யாழ்ப்பாண நீதிமன்றத்தின் 14513 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படியின்படி விற்கப்படும் ஒரு துண்டுக் காணியும் அதற்குள் இருக்கும் ஒரு பகுதி வீடும் 1977-ம் ஆண்டு மாசி மாதம் 23-ந் திகதி (23-2-77) புதன்கிழமை 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 8000/- 27-8-74 தொடக்கம் 12-6-75 வரைக்கும் ரூபா 4000த்துக்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கு இறுக்கப்படும்வரை சட்ட வட்டியாக வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 553-15 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று [illegible] குளம் 6 9/16 குழி கல்வீட்டின் பகுதியும், கிணறும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கக்கூசில் பாவிப்புரித்தும், குறித்த கக்கூசுக்குப் போக்குவரத்துப் பாதை உரித்தும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கும், மேற்கும் [illegible] அருளம்புக்கும், பெண் [illegible]க்கும் உரிய ஆதனம், தெற்கு [illegible] தம்பியுக்கும் பெண் பூரணத்துக்கும் உரிய ஆதனம் இதில் கிணற்றிலும், குசினியிலும் தெற்கெல்லைக் காணிக்குரிய பங்கும் ஒழிவாக்கான உரித்தும்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விளம்பரப்பு
விற்பனை ஆணையாளர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
24-1-77.

5330

பேச்சுவார்த்தை தோல்விகண்டால்

'ரொடீஷியாவில் ஆயுதப் போராட்டம் நடந்தேதீரும்!''

பிரி. வெளிநாட்டமைச்சர் அச்சம்

லண்டன், ஜன 26

''ரொடீஷிய விவகாரம் தொடர்பான இறுதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் அங்கு வெளிநாட்டாரின் ஆயுதப் போராட்டம் நடைபெற்றே தீரும்'' என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. குரொஸ்லெண்ட் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"எந்த வெளிநாடுகள் அவ்விதமான சூழ்நிலை ஏற்படும் கட்டத்தில் ஆயுதப் போராட்டத்தை நடத்தும் என்பது பற்றி எதுவும் அவர் கூறவில்லை.

1973ம் ஆண்டு அங்கோலா விவகாரத்தில் கியூபா தலையிட்டது போன்று அது அமையலாமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இது இவ்வாறு இருக்க, ரொடீஷியாவில் வெள்ளையரின் சிறுபான்மை ஆட்சியை அகற்றி பெரும்பான்மை இனத்தவரான கறுப்பரின் ஆட்சி அமைக்கப்பட கெரில்லா நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென ஸாம்பியா தெரிவித்துள்ளது. கறுப்பு இன மக்கள் விடுதலை பெற ஆயுதப் போராட்டம் ஒன்றே வழி என்று ஸாம்பிய ஜனாதிபதி திரு கெனத் கௌண்டா அண்மையில் கூறியிருந்தது தெரிந்ததே.

இதேவேளை, தாம் ரொடீஷிய விவகாரம் தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் தயாராக இருப்பதாகவும் ஆனால் பிரிட்டனின் சமாதானத் திட்டத்தைத் தான் நிராகரித்ததற்குக் காரணம் அது பாரபட்சமான விதத்தில் அமைந்திருந்ததேயாகும் என்று ரொடீஷியப் பிரதமர் திரு. இயன் ஸ்மித் தெரிவித்திருக்கிறார். நேரிய வழியிலான சமாதானத் திட்டத்திற்குத் தாம் என்றும் தயாராக இருப்பதாக அவர் மேலும் சொன்னார். மிதவாத போக்குடைய கறுப்பர் தலைவர்களுடன் தான் தீர்வு ஒன்று காண முயலப்போவதாகவும் அவர் கூறினார். ஆபிரிக்கத் தேசியவாதத் தலைவர்கள் ரொடீஷியாவில் ஆயுதப் போராட்டம்மூலம் பெரும்பான்மையினரின் ஆட்சியை நிலைநாட்ட அறைகூவல் விடுத்துள்ளனர் என்று கடைசியாகக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. [ஸ்ரீ]

பாரத-போலந்து ஒப்பந்தம்

புதுடில்லி, ஜன. 26

பாரதமும், போலந்தும் பொருளாதார, தொழில்நுட்ப விமானப் போக்குவரத்துத் தொடர்புகளில் இரு ஒப்பந்தங்களைச் செய்துள்ளன.

விமானப் போக்குவரத்துத் தொடர்பான ஒப்பந்தத்தின்படி வாரத்தில் இரு விமானங்கள் பாரதத்தில் இருந்து போலந்து செல்லும். அதே போன்று போலந்தில் இருந்து இரு விமானங்கள் பாரதம் வரும். மேற்படி ஒப்பந்தங்கள் புதுடில்லியில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, போலந்துநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜெரேக் ஆகியோர் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்டன. (ஸ்ரீ)

ஆயுதக்கட்டுப்பாடு:

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் மாஸ்கோ செல்வார்

வாஷிங்டன், ஜன. 26

ஆயுதக்கட்டுப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகளை சோவியத்யூனியனுடன் நடத்தும் பொருட்டு அமெரிக்காவின் புதிய வெளிநாட்டமைச்சர் திரு. வான்ஸ் மார்ச் மாதத்தில் மாஸ்கோ செல்லவிருக்கிறார்.

ஆயுதப்போட்டி தவிர்ப்பு தொடர்பாக சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்படவேண்டுமென அமெரிக்க புதிய ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் கூறியிருப்பது தெரிந்ததே.

திரு. வான்ஸ் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கிறார். (ஸ்ரீ)

ஒபெக் மகாநாடு

ஸ்டொக்ஹோம், ஜன. 26

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டம் ஜூலை மாதம் 12-ந் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

காங்கிரஸ் சபை ஏற்றது

வாஷிங்டன், ஜன. 29

புதிய அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரால் அமெரிக்க சட்ட மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கிரிபின் பெல்லின் நியமனத்தை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்துள்ளது. (ஸ்ரீ)

முப்படை பென்சன்காரர் கோரிக்கை

சென்னை, ஜன. 26

லோகசபைத் தேர்தலில் வட ஆர்க்காடு மாவட்டத்தின் 4 தொகுதிகளிலும் இளைப்பாறிய இராணுவ வீரர்களை நிறுத்துவதென முப்படை பென்சன்காரர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் பிரகடனத்தைத் தயாரிக்கவும் தேர்தல் வேலைகளைக் கவனிக்கவுமென 27 உறுப்பினர்களைக்கொண்ட கமிட்டி ஒன்றையும் இச்சங்கம் நியமித்துள்ளது. [உ]

தி.மு.க செயற்குழு பெப். 20ல் கூடுகிறது

சென்னை, ஜன. 26

இந்திய லோக சபைத் தேர்தல் குறித்து ஆராய்வதற்காக அடுத்தமாதம் 2ம் திகதி தி.மு.க செயற்குழு கூடவுள்ளது.

தி.மு.க. வின் தேர்தல்வியூகம் பற்றியும் செயற்குழு இக்கூட்டத்தில் தீர்மானிக்கும் என்று தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், தி.மு.க. தலைவருமான திரு. மு. கருணாநிதி தெரிவித்தார். (உ)

...

தமிழ்நாட்டில் இரு நாட்கள் வாக்களிப்பு

சென்னை, ஜன. 26

லோகசபைத் தேர்தலில் தமிழ் நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் இரண்டு நாட்கள் இடைவெளி விட்டு இரண்டு நாட்கள் வாக்களிப்பு இடம் பெறுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்டது.

இதுபற்றி அடுத்த வாரம் முடிவு செய்யப்படும் என்றும் தெரிகிறது. (உ)

கம்போடிய அரிசியில் தன்னிறைவு

பாங்கொக், ஜன 26

கம்போடியா அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதாகவும் அதன் ஒரு பகுதி அயலிலுள்ள வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவிருக்கிறது என்றும் பாங்கொக் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [ஸ்ரீ]

பிடிவிருந்து

சுன்னாகம், புதன்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் தொட்டிலடிக் கிளையில் அண்மையில் பத்து ருத்தல் மா கேட்டுக் கிளை முகாமையாளரைத் தாக்கி, உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தது சம்பந்தமாக அதே கிராமத்தைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களுக்குக் குற்றம் விதித்து நஷ்ட ஈட்டைக் கோர்ட்டில் செலுத்தும்படி தவணை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் குறித்த தவணைக்குக் கோர்ட்டில் ஆஜராகத் தவறியவர்களுக்குச் சம்பந்தப்பட்டோர்க்கு மல்லாகம் நீதிபதி திரு. யேசுரத்தினம் பிடிவிருந்து பிறப்பித்தார். (அ)

தேர்தல் சுதந்திரமாக நடைபெற

அவசரகால விதிகள்யாவும் ரத்தாக வேண்டும்

மார்க்ஸீய கம்.கட்சி கூறுகிறது

புதுடில்லி, ஜன. 26

லோக சபைத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமான முறையிலும் நடத்துவதற்காக தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்து சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்று இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி பிரதமர் திருமதி காந்தியைக் கேட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் தமது நிலையைப் பலப்படுத்த தற்போது சிறைக்கு வெளியே இருக்கும் தலைவர்கள் மட்டும் போதாது என்றும் சிறைகளில் இருக்கும் முக்கிய தலைவர்கள் சகலரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் இக்கட்சி பிரதமரைக் கோரியுள்ளது.

தமிழ்நாட்டில்

லோகசபைத் தேர்தலுடன் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலையும் நடத்துமாறு கோரியுள்ள இக்கட்சி தமிழ் நாட்டில் கூட்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளது. (உ)

ரப்பர் உற்பத்தி அதிகரிப்பு

லண்டன், ஜன. 26

கடந்த ஒன்பது மாதங்களில் உலக நாடுகளில் இயற்கை, செயற்கை றபர் உற்பத்திகள் அதிகரித்துள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இயற்கை றபர் உற்பத்தி 7.6 சதவிகிதத்தாலும் செயற்கை றபர் 16.9 சதவிகிதத்தாலும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் றபர் பாவனையும் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

வேலையில்லாப் பிரச்னை பிரிட்டனில் அதிகரிப்பு

லண்டன், ஜன 26

பிரிட்டனில் வேலையில்லாதோர் தொகை அதிகரித்துவருவதாகப் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

லண்டனில் 77 ஆயிரத்து 191 பேர்வரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாம் நாட்டின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடப் போவதாகப் பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் தெரிவித்துள்ளார். [ஸ்ரீ]

மத்தியக்கிழக்கு தொடர்பான

ஜெனிவா மகாநாட்டில் பிரான்சுக்கும் இடம்

சவூ. அரேபிய மன்னர் விருப்பம்

வாஷிங்டன், ஜன 26

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான ஜெனிவா மகாநாட்டில் பிரான்ஸுக்கும் இடமளிக்க வேண்டுமென சவூதி அரேபிய மன்னர் காலித் தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்கு விவகாரம் தொடர்பான இம்மாநாடு மீண்டும் கூட்டப்படவேண்டியதன் அவசியம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஐ. நா. பொதுச் செயலாளர் கேர்ட் வால்ட்ஹெய்ம் மத்தியகிழக்கு நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஸ்ரீ]

துவேஷ மனப்போக்குகளை விடுத்து

'ஒருமைப்பாட்டைக் கருதி செயல்பட வேண்டும்'

இந்திய அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை

புதுடில்லி, ஜன. 26

''அரசியல் கட்சிகள்பொதுத் தேர்தல் நடைபெற விருக்கும் இவ்வேளையில் துவேஷ மனப் போக்குகளைக் கைவிட்டு தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாக வைத்து செயற்படவேண்டும்'' என்று பாரத ஜனாதிபதி ஜனாப் பக்ருதீன் அலி அஹமத் பாரதக்குடியரசு தினத்தையொட்டி நேற்றிரவு நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய வானொலிச் செய்தியில் கூறினார். ஜனாதிபதி தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

''ஜனநாயகம் நம் நாட்டில் வேரூன்றியுள்ளது. ஜனநாயகத்திற்கு வன்முறை ஒவ்வாதது. அரசியல் கட்சிகள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அமைதியைக் காத்து பொறுப்புணர்ச்சியுடன் நாட்டின் வளர்ச்சிக்காக அரசியல் கட்சிகள் பாடுபட வேண்டும். நம் நாட்டிலேயே சகல பொருட்களையும் உற்பத்தி செய்ய நாம் அனைவரும் முன் வரவேண்டும்'' [ஸ்ரீ]

யாழ். வீதிகள் திருத்தத்திற்கு நிதி அங்கீகரிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபை வீதிகளின் திருத்த வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் வீதிகளில் வேலைகளின் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கஸ்தூரியார் வீதியின் திருத்த வேலைக்கு 26,500 ரூபா அங்கீகரிக்கப்பட்டு, வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெரிய கடையிலுள்ள பழக்கடைத் திருத்த வேலைக்கு 7,500 ரூபா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெரியகடை நடைபாதைக்கு 19,575 ரூபா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் வீதிகளுக்கும் பணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொன்னம்பலம் வீதி-22,650 ரூபா, கோவில் வீதி-34,500 ரூபா, கச்சேரி-நல்லூர் வீதி-12,000 ரூபா, சட்டநாதர் வீதி-9,000 ரூபா, வைமன் வீதி-3,000 ரூபா, விக்டோரியா வீதி-8,650 ரூபா, பருத்தித்துறை வீதியின் சில பகுதிகள்-5,700 ரூபா, அம்மன் வீதி-3,200 ரூபா. (ஈ)

……

யாழ். விசேட ஆணையாளர்

வட்டார தேவைகளை நேரில் பார்வையிட்டார்!

யாழ்ப்பாணம், வியா. வர்.

யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப் ஆணையாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டாரங்களின் தேவைகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

நாவலர் வீதி, நல்லூர், கல்யாண மண்டபம், நவீன மார்க்கட் மற்றும் பல வீதிகளை அவர்கள் பார்வையிட்டனர்.

ஒவ்வொரு சனியும், ஞாயிறும் இவர்கள் வட்டாரங்களை நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள தேவைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளனர்.

இவர்களுடன் தேவைக்கேற்றபடி, மராமத்து பொறியியலாளர், மின்சார பொறியியலாளர், சுகாதாரவைத்திய அதிகாரியும் செல்வார்கள். (ஈ)

கூட்டணி காரியாலய சேத வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தைச் சேதப்படுத்தியதாக இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கெதிராக தொடரப்பட்ட வழக்கு மேற்படி இரு கான்ஸ்டபிள்களும் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதையடுத்து விசாரணைக்காக ஒத்திப்போடப்பட்டது.

காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரியாலயத்தினுள் நஷ்டம் விளைவிக்கும் நோக்கத்துடன் புகுந்து அங்கிருந்த பொருட்களைச் சேதப்படுத்தி நஷ்டம் விளைவித்ததாக காங்கேசன்துறைப் பொலிஸைச் சேர்ந்த ஹேமரத்ன, சேனதிர ஆகிய பொலிஸ் கான்ஸ்டபிள் மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டசமயம் இருவரும் தாம் சுற்றவாளிகளெனத் தெரிவித்தனர்.

இதையடுத்து வழக்கு ஏப்ரல் 4ந் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், வழக்காளி தரப்பில் சட்டத்தரணி க. நடராசாவும் ஆஜரானார்கள். (ஈ)

கைக்கடிகாரமும் பணமும் வழிப்பறி

சாவகச்சேரி, புதன்

பஸ்வண்டியால் இறங்கிப் போனவரை பின்னால் தொடர்ந்து சென்ற இருவர் அடித்து விழுத்தி அவரிடம் இருந்த ரொக்கம் 500 ரூபாவையும் கைக்கடிகாரத்தையும் வழிப்பறி செய்துள்ளனர்.

இச்சம்பவம் பளைப்பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஊமிக்காடு என்னும் இடத்தில் நடந்துள்ளது.

காயமடைந்த வே. இரத்தினராசா சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பளைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பளைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு வி. செல்லையா சந்தேக நபர்கள் இருவரைக் கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளார். (ஈ)

"குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் செல்வம் கல்வியே

சாவகச்சேரி, புதன்

"எமது குழந்தைகளுக்கு நாம் கொடுக்கவேண்டிய செல்வம் கல்விச்செல்வமாகும். நமது பின்னோர்கள் எதிர்காலத்தில் பெரும் புகழும் பெற்றுவாழ நாம் இப்போது வழங்கும் கல்வியே கைகொடுத்துதவும். அக் கல்வியை சிறுவர்க்கு சிறுவயதிலேயே ஊட்டிப் பலமான அத்திவாரத்தைப் போடவேண்டும்"

சாவகச்சேரி கிறிஸ்தவசபையால் ஒழுங்கு செய்யப்பட்ட பாலர் நிலையம் ஒன்றை திறந்து வைத்துப்பேசிய இலங்கை சர்வகலாசாலை முன்னாள் பேராசிரியர் கலாநிதி சி. ஜே. எலியேசர் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பாலர் நிலையம் சாவகச்சேரி கிறிஸ்தவதேவாலயத்தின் பக்கத்தில் இருபதாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள சபை மண்டபத்தில் திறக்கப்பட்டது.

சாவகச்சேரி கிறிஸ்தவசபை போதகர் வண. கே. எஸ். ஜெயசிங்கம் ஆராதனை நடத்தியபின் பிரதமவிருந்தினர் மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

டாக்டர் எலியேசர் தொடர்ந்து பேசும்போது: கிறிஸ்தவ சபை இப்படியான கல்வித் தொண்டை ஆற்றமுன்வந்ததுடன் பாலர்க்கு ஏற்ற ஒருவரை ஆசிரியராக நியமித்ததையும் மிகவும் வரவேற்கத்தக்கது'' என்று கூறினார்.

வண. ஜெயசிங்கம் தமது தலைமையுரையில் கலாநிதி எலியேசரின் உலகப் புகழையும் பேராற்றலையும் பாராட்டினார். செயலாளர் திரு எஸ். கே. இரவிந்தநாதனும் நன்றிகூறினார். (ஈ)

தாக்குதல் வழக்கில்

பிக்குவிடம் மன்னிப்புக் கேட்க எதிரிகள் மறுப்பு!

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைப் பிக்குவை தாக்கிப் படுகாயம் விளைவித்தது தொடர்பான வழக்கில் எதிரிகள் மேற்படி பிக்குவிடம் மன்னிப்புக் கோர மறுத்ததையடுத்து வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையைச் சேர்ந்த தெல்லே பத்மஸ்ரீ தேரோவைக் கத்தியால் வெட்டியும், பொல்லுகள் தடிகளால் தாக்கியும் கையால் அடித்தும் படுகாயம் விளைவித்ததாக காங்கேசன்துறையைச் சேர்ந்த தயாபால விஜயசேகரா, சுமிங்க முதியான்சலாகே, பதிரணகே கிமென்சிங்க, பெரேரா விக்பீரட் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் எதிரிகள் மேற்படி பிக்குவிடம் மன்னிப்புக்கோரினால் சமாதானமாக செல்லமுடியுமென நீதிபதி திரு டி. யேசுரத்தினம் தெரிவித்தார்.

இதையடுத்து எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம் மேற்படி பிக்கு தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து எதிரிகளும் பலமாகத் தாக்கப்பட்டதால் எதிரிகள் மன்னிப்புக் கேட்க தயாராக இல்லை என்று தெரிவித்தார்

இதையடுத்து நீதிபதி வழக்கு விசாரணை செய்வதற்காக ஏப்ரல் மாதம் 4-ம் திகதி ஒத்திவைத்தார். (ஈ)

ஊர்காவற்றுறைப் பகுதி

விவசாயிகளுக்கு போதனாசிரியர் யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள விவசாயிகள் தகுதிக்கேற்ப விதைவகை, உலர்வடையும் நிலையிலுள்ள வயல்களில் எள், பயறு, சோயா அவரை, சணல் போன்றவற்றை விதைக்குமாறு அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க. இளங்கொழுந்து அறிவித்துள்ளார்.

விதை தேவைப்படுவோர் தம்முடன் தொடர்புகொண்டு விதைகளைப் பெற்று, பயிரைப் பெருக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன வசதியுள்ளோர் வெந்தயம், சீரகம், பம்பாய் வெங்காயம் செய்கைபண்ணுவது பயனுள்ளதென்றும் அவர் கூறியிருக்கிறார்.

"கல்விப்பணியை தெய்வப் பணியாகக் கருதவேண்டும்"

புங்குடுதீவு, புதன்

"இளமையில் ஊட்டப்படுகின்ற கல்விதான் உயர்தரக் கல்விக்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் அமைவதால் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் போதனைகள் அளிக்கப்படவேண்டும். ஏற்றத்தாழ்வற்ற முறையில் சமுதாய அமைப்பு உருவாகவேண்டுமானால் மக்கள் மத்தியிலிருந்து அறியாமை அகற்றப்படவேண்டும். உண்மையில், ஒரு மனிதனை அவனது நிறைவையும் அறிவையும் பண்பையும் கருத்திற்கொண்டுதான் மதிப்பிடவேண்டுமே தவிர, அவனது குலம் கோத்திரத்தைக் கொண்டல்ல ஆபிரகாம் லிங்கன் தொடக்கம் கலைஞர் கருணாநிதி வரைக்கும் அவர்களது கல்விச் செல்வத்தால் தலைவனாகி ஆட்சிபீடமேறியவர்களே தவிர, மேல்குடியிற் பிறந்தோர் என்பதாலல்ல. எனவே அனைத்து மக்களுக்கும் அறிவூட்டும் பணியில் பொது இயக்கங்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும். தங்கள் கிராமத்துக் கல்விப்பணிகளைத் தெய்வப் பணியாக மக்கள் கருதவேண்டும். ஆலயங்களுக்கு ஆயிரக்கணக்கில் செலவழிப்பது போன்று கல்விச்சாலைகளின் வளர்ச்சியாகவும், பணத்தினை வாரிவழங்கத் தனவந்தர்கள் முன்வரவேண்டும். உத்தியோகம் பெறுவதற்காக அல்லக் கல்வி பெறுவது. தங்களை உயர்த்திக்கொள்வதற்காகவே என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு குழந்தைகளின் கல்வியில் பெற்றோர் அக்கறை காட்டவேண்டும். ஏழைச் சிறார்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக இலவசமாகப் பாலர் பாடசாலைகளை நடத்துவதற்கும் பொது இயக்கங்களுக்கும் தனவந்தர்கள் உதவ வேண்டும்."

ஊரதீவில் சிறுவர் பாடசாலையின் புதுவருட ஆரம்ப வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. க. சோமாஸ்கந்தனின் வரவேற்போடு ஆரம்பமான இவ்வைபவத்தில் 'சர்வோதயம்' க. திருநாவுக்கரசு, ஊரதீவு உப தபாற்கந்தோர் அதிபர் திரு. வ. சுப்பிரமணியம், த. மணிமேகலை, க. புஷ்பமணி ஆகியோரும் பேசினர்.

செல்விகள் சித்திரா, விமலா ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், சிறுவர்களின் தேவாரப் பண்ணிசையும் இடம்பெற்றன.

பாடசாலை ஆசிரியை செல்வி சோ. தவலக்ஷுமி நன்றி தெரிவித்துப் பேசினார்.

உதைபந்தாட்டம்:

இராணுவத்தெரிவுக்கோஷ்டி யாழ். நகரில் மோதுகிறது

யாழ்ப்பாணம், வியா.

அகில இலங்கை இராணுவத் தெரிவுக்கோஷ்டி எதிர்வரும் வெள்ளியும் சனியும் யாழ். நகரில் மோதுகின்றது.

கடந்த வருடம் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவில் அகில இலங்கரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட அகிலஇலங்கை இராணுவத் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் தெரிவுக் கோஷ்டியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மோதுகின்றன.

சனிக்கிழமை இராணுவத் தெரிவுக்கோஷ்டி தெல்லிப்பளை கிறாஸ்கோப்ஸ் விளையாட்டுக்கழகத்துடன் மோதும்.

மேற்படி இரு போட்டிகளும், யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4-15க்கு நடைபெறும்.

பாடசாலை நூலகங்களை விஸ்தரிக்க முடிவு

கொழும்பு, புதன்

பாடசாலைகளின் நூலகங்களை விஸ்தரிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

தற்போது 800 பாடசாலை நூலகங்கள் இருக்கின்றன.

மேலும் 50 நூலகங்களைப் பாடசாலைகளில் இவ்வாண்டுக்குள் அமைக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை கல்வியமைச்சு பிராந்திய கல்வியதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு நூலக அறிவு பற்றி விபரிக்க விரிவுரைகளை நடாத்த ஒழுங்கு செய்து வருகிறது. (ஸ்ரீ)

……

அடிக்கடி பழுதாகும் தொலைபேசி

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்புத் தபால் கந்தோரில் தொலைபேசி அழைப்பும் பெறுவதில் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். இக்கந்தோரில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்கத்தொலைபேசி அடிக்கடி பழுதடைவதே இதற்குக் காரணமாகும். மிகப்பழையதான இந்தத் தன்னியக்க தொலைபேசி நிலையத்திற்கு நவீன இயந்திர சாதனங்களைப் பொருத்திச் சீர் செய்யுமாறு இங்குள்ள தபால் நிலைய அதிகாரிகளும் மற்றும் பொதுமக்களும் நீண்டகாலமாக மேலிடத்தை வற்புறுத்தி வந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள தனியார் தொலைபேசி பாவனையாளர்களும் தங்கள் அவசர தேவைகளுக்கு கூட தொலைபேசியை பாவிக்க முடியாது சிரமப்படுகின்றனர். (அ)

மயிலிட்டி கி. ச. இணக்கசபை உறுப்பினர்

தெல்லிப்பளை, புதன்

மயிலிட்டிக் கிராமசபைப் பகுதிக்கு பிரதி நீதியமைச்சர் திரு எம். எம். முஸ்தபாவால் இணக்கசபை உறுப்பினர்களாக மூன்று வருட காலத்துக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சி. வேதநாதபிள்ளை, கா. சிவபோசநாதன், கா. செல்லையா, செ. சந்திரசேகரம், இ. நமசிவாயம், த. பாலசுப்பிரமணியம், இ. இராசகோபால்.

(2ம் பக்கம் பார்க்க)

RIO (Jaffna) Daily 10-30, 4-45. 7-15, 9-45

The picture of the year

The story of freedom fighters - Men who were prepared to die on their feet than live on their bended knees.

A classic WAR Film

rod taylor
PARTIZAN

ராணி (யாழ்-நகர்)
☆ஜெய்சங்கர் ☆லக்ஷ்மி
☆ஜெயா ☆முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
கனிமுத்து பாப்பா

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா—ஜெயசுதா—நாகேஷ்
நம்பியார் நடித்த
மன்னவன் வந்தானடி
(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ தினசரி 4 காட்சிகள் [யாழ்.நகர்] போன்: 7693
ஏ. வி. எம். ராஜன்-லதா
நடித்த
வீட்டுக்கு வந்த மருமகன்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

ரீகல் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30, 9-45
ஏ. வி.எம்.ராஜன்-புஷ்பலதா
பால்குடம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
28-1-77 முதல் மக்கள் திலகத்தின்
வெள்ளிவிழா சித்திரம்
இதயக்கனி

“காலஞ்சென்றவரின் வயிற்றில் 1-ம் எதிரி கத்தியால் குத்தினார்”

சுன்னாகம் கொலை வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

“சம்பவதினம் எனக்கும் வேறு சிலருக்குமிடையில் ஏற்பட்ட தகராறைத் தீர்த்து விலக்குப் பிடித்துவிடுவதற்காக வந்த காலமானவரை அவ்விடத்தில் நின்ற 1-ம் எதிரி கூரிய ஆயுதத்தினால் குத்தியதும் அவர் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடினார். அப்போது வயிற்றில் ஏற்பட்ட காயத்தினூடாக அவரது குடல் வெளியில் வந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பொத்திப் பிடித்தபடி அவர் ஓடினார்.”

இவ்வாறு சுன்னாகம் சந்திக் கொலைச் சம்பவம் குறித்து மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த மரண விசாரணையில் சாட்சியமளித்த சுன்னாகத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகரத்தினம் என்பவர் கூறினார்.

சுன்னாகத்தில் வைத்து மல்லாகத்தைச் சேர்ந்த வே. காராளசிங்கம் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக இம்மரண விசாரணை நீதிபதி திரு. டி. பேசுரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

மேற்படி கொலைச் சம்பவம் குறித்து சுன்னாகத்தைச் சேர்ந்த வீரப்பர் அரசகுலசிங்கம், ஏழாலையைச் சேர்ந்த பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

மேற்படி மரண விசாரணையில் வேலுப்பிள்ளை நாகரத்தினம் என்பவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

26-11-76 பிற்பகல் 5-30 மணியளவில் நான் எனது வீட்டில் நின்றபோது செல்லத்துரை என்பவர் வந்து சுன்னாகத்திலுள்ள இறந்தவரின் கடைக்கு வரும்படி அழைத்தார். நான் வீட்டிலிருந்து புறப்பட்டு இறந்தவரது கடைக்கு அருகாமையிலுள்ள கடைக்கருகில் பேசிக்கொண்டிருந்த போது எனக்கு கனகநாதன் என்பவர் அடிக்கக் காத்திருக்கிறார் எனத் தெரியவந்தது. நான் தொடர்ந்து போன போது கனகநாதன் ஓடிவந்து எனக்கு அடித்தார். நான் ஓட முற்பட, மேற்படி 2 எதிரிகளும், கனகநாதனின் சகோதரரும் என்னைத் துரத்தி வந்தனர். துரத்தி வந்த 2ம் எதிரி மண்வெட்டிப்பிடியால் எனக்கு அடித்தார். அப்போது கனகன் என்பவர் விலக்குப்பிடித்தார். அச்சமயம் காலமானவரும் அவ்விடத்தை நோக்கி ஓடி வந்து விலக்குப்பிடித்துவிட்ட போது 1-ம் எதிரி திடீரென அவருக்குக் கூரிய ஆயுதமொன்றினால் குத்தினார். நான் பயந்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடினேன். அப்போது காலமானவரும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தினூடாக குடல் வெளியில் தொங்க அதைப் பொத்திப் பிடித்தவாறு பொலிஸ் நிலையம் நோக்கி ஓடிவந்தார். பொலிசார் ஆஸ்பத்திரிக்குப் போகுமாறு கூறியதால் உடன் ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டு போனேன். சிகிச்சை அளித்த பின் மறுநாள் அவர் மரணமானார்.”

இதையடுத்து நீதிபதி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைக் கோரி மரண விசாரணையை பெப்ரவரி 1-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேற்படி சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், வழக்காளர் தரப்பில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. காதரும் ஆஜராகி இருந்தனர்.

தேர்தல்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருகின்றது.’

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியும் இரண்டாவது தேசிய அரசுப் பேரவை உறுப்பினருமான திரு. இராஜன் செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லன்குடா உபதபால் கந்தோரின் தொலைபேசித் தொடர்பையும் மாவித்தி வித்தியாலயத்திற்கான புதிய மண்டபத்தையும் திறந்து வைத்தும் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

ஏறாவூர் பிரதேச சபையின் பணிப்பாளர் திரு. நி. மாணிக்கவாசகர் தலைமையில் மேற்படி வைபவம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

“இன்னும் நான்கு மாதங்களின் பின்னர் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் எனது பதவி பறிபோனாலும் நான் அஞ்சமாட்டேன். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலம் பற்றித் தான் கவலைப்படுகிறேன்.

“எந்தத் தேர்தலில் தோற்கடிப்பது பற்றி சிந்திக்காமல் இளைஞர்களின் கல்வியைப் பற்றியும் தொழிலின் வளர்ச்சி பற்றியும் சிந்தியுங்கள். மாணவர்களும் இளைஞர்களும் அரசியலில் ஈடுபட்டு வாழ்க்கையைப் பாழாக்கி விடக்கூடாது. தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியைத் தூண்டி விட்ட தமிழர் கூட்டணியினர் சௌகரியமாக உலாவி வருகிறார்களே தவிர தொழில் பற்றியோ சிறையிலிருக்கும் இளைஞர்களைப் பற்றியோ கவலைப்படுகிறார்களில்லையே”

வித்தியாலய அதிபர் திரு. த. சிவராசம் சிறப்புரையும், திரு. ம. நடராசா ஆசிரியர் நன்றியுரையும் நிகழ்த்தினர். (ஈ-ஆ)

திருடிய பொருட்களை வண்டியில் ஏற்றுச் சென்றனராம்!

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள திருமதி எஸ். முத்துக்குமாருவின் வீட்டில் திருடர் உட்புகுந்து பல விலைமதிப்புள்ள பொருட்களை திருடிச்சென்றுள்ளனர்.

அயல்வீட்டிலுள்ளவர்கள் [illegible] ஐந்து ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுச் சாமான்களும் திருடர்களால் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

வீட்டுக்கூரையால் திருடர் உள்ளே சென்று கதவைத் திறந்து வீட்டிலிருந்த பொருள்களை மாட்டுவண்டியில் ஏற்றிச்சென்றுள்ளனராம். சங்கானைப்பொலிசார் பொருள்களைக் கண்டுபிடிக்க புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

கஞ்சா வைத்திருந்தார்: ரூ.25 அபராதம்

சாவகச்சேரி, புதன்

சட்டைப் பொக்கட்டில் 50 கிறேம் கஞ்சா வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி பதில் மாவட்ட நீதிபதி எதிரிக்கு 25ரூபா அபராதம் விதித்தார்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடமாடிய மட்டுவிலைச் சேர்ந்த ஒருவர்மீது அங்கு ரோந்து சுற்றிய பொலிசார் சந்தேகம் கொண்டு பரிசோதனை செய்த போது அவரது பொக்கட்டில் 50 கிறேம் கஞ்சா காணப்பட்டது.

எதிரி பதில் மாவட்ட நீதிபதி

[2-ம் பக்கம் பார்க்க]

இவர்கள்மீது விசாரணை பின் போடப்பட்டது

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழையில் ஒரு விடுதியில் வைத்துச் சந்தேகத்தின்பேரில் கைதான 4 இளம் பெண்களும், 3 வாலிபர்களும் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதால் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்காக ஒத்திபோடப்பட்டது.

தெல்லிப்பழையில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் இவ் விடுதியைத் திடீர் முற்றுகையிட்ட காங்கேசன்துறைப் பொலிசாரால் அங்கிருந்த அந்தோனிப்பிள்ளை சந்திரமாலா பிள்ளை, பெருமாள் பொன்னையா, தர்மலிங்கம் விஜயராசா ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடப்பட்டனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தாம் சுற்றவாளிகள் என ஏழு பேரும் கூறியதையடுத்து அவர்கள் மீதான வழக்கு விசாரணை மார்ச் 21-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், பொலிஸ் தரப்பில் காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் பே. சிவப்பிரகாசமும் ஆஜராகி இருந்தனர். (அ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

புவோனி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி - விஜயா
தங்கப்பதக்கம்

நாகஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார் - சுஜாதா
மயங்குகிறாள் ஒருமாது

தென்னகத்தில் 175 நாட்களுக்கு மேல்
ஓடிய வெள்ளி விழாச் சித்திரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்
என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மருமகளின் அப்பா என் மகனுக்கு மாமனார் ஆனால் அவருக்கும் எனக்கும் என்ன உறவு?
இது தான் கதை

ராஜா யாழ்.நகர் 3-வது வெற்றி வாரம்
ஜெயசங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

ஈழநாடு
The EELANADU

“கிராம அபிவிருத்தி இயக்கங்களில் இளைஞர் பங்கு முக்கியம்”

— யாழ். அரசாங்க அதிபர்

மாவிட்டபுரம், புதன்

'கிராம அபிவிருத்தி இயக்கமானது சுயமுயற்சியின் அடிப்படையிலான ஓர் இயக்கமாகும். இவ்வியக்கத்தில் இளைஞர்களின் பங்கு மிக அவசியமானது. நமது சனத்தொகையிலே 54 சதவீதத்தினர் இளைஞர்களாக இருப்பதால் இப்படியான இயக்கங்களை வழிநடத்துவதில் அவர்கள் பெரும்பங்கு வகிக்க வேண்டும். இப்படியான கிராம அபிவிருத்தி இயக்கங்கள் மூலம் விவசாயம், கைத்தொழில் தொடர்பான கருத்தும் பயிற்சிகளும் ஏற்பட்டு கிராமங்களிடையே இத்துறைகளில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த கிராம இளைஞர்கள் முன்வர வேண்டும்.'

இவ்வாறு மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் அமைக்கப்பட்ட கைத்தொழில் மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபால கூறினார்.

அரசாங்க அதிபரும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் பிரமுகர்களும் கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயத்திலிருந்து மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு வழிநெடுகிலும் மாலைகள் அணிந்து வரவேற்பளிக்கப்பட்டபின் சங்கத் தலைவர் திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடந்த திறப்பு விழாவில் அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'கிராமமுன்னேற்றச் சங்க மண்டபங்களுக்கு முன்னர் 3500 ரூபா வரையிலேயே அரசின் நிதியுதவி வழங்கப்பட்டது. ஆனால் சென்றவருடம் இதைச் சிறிது அதிகரித்து 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபாவாக வழங்கத் தீர்மானித்திருந்தோம். ஆனால் இப்படியான மண்டபங்களுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்குமேல் ஒதுக்கப்படல் வேண்டும் என வடபகுதி தேசிய பேரவை உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். அதன்பின்பு இம்மண்டபங்களை கைத்தொழில் மண்டபங்கள் என அமைப்பதென தீர்மானித்து 10 ஆயிரம் ரூபாவுக்கு நிதியுதவி செய்தோம்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. கந்தையா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'ஒரு கிராமம் வளர வேண்டுமானால் கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில் ஆகிய துறைகளின் அபிவிருத்தி அவசியம். இந்தியாவில் ஒவ்வொரு கைத்தொழில் அபிவிருத்திக்காகவே இப்படியான கைத்தொழில் மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன. முன்னேறிய நாடுகளில் வீட்டுக்குவீடு சிறுகைத்தொழில்கள் பல்கிப்பெருகியுள்ளதாலேயே அந்நாடுகள் விரைவாக முன்னேற முடிந்தது. நமது நாடும் விரைவில் முன்னேற வேண்டுமாயின் நமது வீடுகளெல்லாம் சிறுகைத்தொழில் நிலையங்களாக மாற வேண்டும்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஆர். நடராசா பேசுகையில், 'யாழ் மாவட்டத்திலுள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே இப்படியான கைத்தொழில் மண்டபம் முதன்முதலாகத் திறக்கப்படுவது பாராட்டத்தகுந்தது என்றார்.

மற்றும் யாழ். பொதுசன தொடர்பதிகாரி திரு. பி. எஸ். பத்திரி, வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த. அமுதசாகரன், வலிவடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. சி. சிவரத்தினம் ஆகியோரும் பேசினர்.

திறப்புவிழாவையொட்டிய சிறப்புமலரை மன்னார் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. க. தங்கநாதன் வெளியிட்டு வைக்க திரு. க. கதிர்காமத்தம்பி முதற்பிரதியைப் பெற்றார்.

கிராம அபிவிருத்திப் படக்காட்சியும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [வ]

கண்டாவளை கொலைவழக்கு:

சாட்சியங்கள் முரண்பாட்டினால் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வியா.

கண்டாவளை கொலைவழக்கில் சாட்சியங்கள் முரண்பாட்டினால், விசாரணை நடுவில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ் வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் ஜூரி எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் 75-ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி தம்பு சித்தர், ஆழ்வார் வேலாயுதம் ஆகியோர் முருகேசு மாணிக்கராசா என்பவரைக் கொலை செய்ததாகவும் அதேநேரத்தில் கந்தர் இருஞானநந்தனை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் அதேநேரம் அதே இடத்தில் செல்லையா வைரமுத்துவை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஏ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி எஸ். வரதராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினார்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் முக்கியசாட்சியங்களில் பல முரண்பாடு இருப்பதால் வழக்கை தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென ஏகமனதாகத் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். (ச

நரம்பியல்நிபுணர் 31-ம் திகதி வருவார்

யாழ்ப்பாணம், வியாழன்

நரம்புநோய்ச்சிகிச்சை நிபுணர் டாக்டர் என். சுப்பிரமணியம் எதிர்வரும் 31ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் யாழ். ஆஸ்பத்திரி 15-ம் வார்ட்டில் தமது வழமையான சிகிச்சைகளை ஆரம்பிப்பார். அதன் பின்னர் ஒன்றுவிட்டொரு திங்கட்கிழமை இச்சிகிச்சை நிலையத்தில் அவர் பணியாற்றுவார்.

இந்த சிகிச்சைகளின் போது இவரது உதவியாளராக இருப்பதற்கு உதவிடாக்டர் ஒருவரை நியமிக்கும்படி யாழ். ஆஸ்பத்திரி வைத்தியகலாநிதியிடம் டாக்டர் சுப்பிரமணியம் கோரியுள்ளார்.

முல்கிரிகல இடைத்தேர்தல் வழக்கு:

பூர்வாங்க ஆட்சேபனைகள் ரத்து; மார்ச் 4-ல் விசாரணை

காலி, புதன்

முல்கிரிகலத் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் எதிர்மனுதாரர் சார்பில் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகளை காலித் தேர்தல் நீதிபதி திரு. பி. ஈ. டி. சில்வா தள்ளுபடி செய்தார். இந்த வழக்கின் விசாரணை மார்ச் மாதம் 14ந் திகதி ஆரம்பமாகுமென்று அவர் அறிவித்தார்.

தேர்தல் ஆட்சேபனை இவ்வழக்கை உயர்நீதிமன்றத்திடமே கையளிக்கப்பட்டது. இது மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதியிடம் கையளிக்கப்பட்டு. முல்கிரிகலவுக்கு மிக அருகிலுள்ள மேல் நீதிமன்றமான மாத்தறை மேல் நீதிமன்றத்திலேயே விசாரணை நடைபெற்றிருக்க வேண்டுமென்ற பூர்வாங்க ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆட்சேப மனு மீதான விசாரணை நடத்தக் காலி நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. லக்ஷ்மன் ராஜபக்ஷ தெரிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த ஆட்சேப மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. எதிர் மனுதாரர்கள் இந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவிருப்பதாகத் தெரிகிறது.

சிந்தெட்டிக் விநியோகம்: முறையானதிட்டம்வேண்டும்

சங்கானை, புதன்

சங்கானை ப. நோ. கூட்டுறவுச் சங்க மின்தறி நெசவாலையில் உற்பத்தி செய்யப்படும் சிந்தெட்டிக் துணிகளை சங்கக் கிளைகள் மூலம் ஒரு திட்டத்தின் கீழ் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சங்கானைப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் யாழ். மாவட்ட கூட்டுறவு அதிகார சபைத் தலைவர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலாவைக் கேட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக சங்கக்கிளைகளுக்கு இத்துணிவகை வாங்கச் செல்பவர் திரும்பி அனுப்பப்படுகிறார்கள். எதுவும் செப்பனிடப்படாத, செப்பனிடப்பட்ட சிந்தெட்டிக் துணிகள் சங்கத்தில் போதிய அளவு இருப்பில் உள்ளதாக பொதுமக்கள் பலர் தமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகவும் திரு. திருச்சிற்றம்பலம் தமது கடிதத்தில் எழுதியுள்ளார்.

இதுபற்றி சங்கானை மக்கள் வங்கி முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். (உ)

ஆனைக்கோட்டை

பெண்கடத்தல் வழக்கு: எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

ஆனைக்கோட்டை பெண் கடத்தல் வழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 75 நவம்பர் 12ம் தேதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 19 வயதான செல்வி ராஜேஸ்வரியை அவரது விருப்பத்துக்கு மாறாக அவரை பலாத்காரம் செய்யும் நோக்கமாகக் கடத்திச்சென்றதாக நச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இ. சுப்பிரமணியம் மீதும், இதற்கு உடந்தையாக இருந்ததாக மு. சின்னத்துரை, இ. துரைசாமி ஆகியோர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி எஸ் மகாதேவாவின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினார்.

விசாரணையின்பின் நீதிபதி எதிரிகள் மூவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (ம)

ரயில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வி. ரி. நவரத்தினராஜா ராஜினாமாச்செய்ததையடுத்து திரு. அமரசூரிய இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ

பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வளாகசமூகவியல் விரிவுரையாளர் டாக்டர் திருமதி கஸ்ரிடஸ் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

3 மாதகாலத்துள் இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

கூப்பன் யாருடையது?

வண்ணார்பண்ணை அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் பாலசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் ஒன்று "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

நெற்திணைக்களம் ஆலைகள் நிறுவும்

கொழும்பு, புதன்

நெற்சந்தைப்படுத்தும் திணைக்களம் நான்கு நெற்களஞ்சியங்களையும் ஆலைகளையும் நிறுவவுள்ளது.

கல்முனை, பொலநறுவை, இங்கினியாகல, மினிப்பே ஆகிய தொகுதிகளில் இவை நிறுவப்படும்.

மினிப்பே தொகுதியில் களஞ்சியம் அடுத்தமாதம் 5-ம் திகதி பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவால் திறந்துவைக்கப்படும். இக் களஞ்சியங்கள் ஆலைகள் நிறுவப்படுவதன் மூலம் நவீன முறைகள் கையாளப்படும் என்று நெற்சந்தைப்படுத்தும் சபைத்தலைவர் திரு. எம். ஜே. பெரேரா தெரிவித்தார். (ஸ்ரீ)

யாழ். நகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதாகவும், பிச்சைக்காரக் குடும்பங்கள் வீதியின் கரையோரத்திலிருந்து அசுத்தம் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமரர் துரையப்பா மேயராக இருந்த காலத்தில், யாழ்ப்பாண நகரப்பகுதியிலிருந்து பிச்சைக்காரர்களை அகற்றி நகரை சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-அ)

மரண அறிவித்தல்

முத்தையா பொன்னுத்துரை

அராலி மேற்கைச் சேர்ந்த (முன்னைநாள் உரும்பராய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அராலி முருகமூர்த்தி வித்தியாசாலைகளின் ஆசிரியரும், ஞானியார் கோவில் தர்மகர்த்தாவுமாகிய) முத்தையா பொன்னுத்துரை காலமாகிவிட்டார். இவர் பண்டாரவளை சென். ஜோசப் கல்லூரியின் ஆசிரியர் கதிர்காமராசாவின் தந்தையாவார். ஈமக்கிரியைகள் இன்று [27-1-77] வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

5340

மரண அறிவித்தல்

க. சின்னையா

இளைப்பாறிய தபால் அதிபர் பொயிட்டி க. சின்னையா காலமானார். இவர் நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புஷ்பராணி, புவனேஸ்வரன் (பிரதான பொறிஞர், நீர்வழங்கல் — வடிகாலமைப்புச் சபை இரத்மலானை) அவர்களின் அன்புத் தந்தையும் திருமதி இராஜலட்சுமி அவர்களின் மாமனாரும் ஹேமப்பிரியன் பாட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக பொயிட்டி நீர்வேலியிலுள்ள "புஷ்ப நிழல்" என்னும் இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை மாலை நான்குமணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

5341

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49. Jaffna. Telegrams Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.